**ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 17 கமநலசேவை குழுக்கள் - 2024**

-----------------------------------------------------------------------------------------------

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

1.1 ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 17 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 17 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 02 குழுக்களின் அறிக்கைகள் மறுப்பு அபிப்பிராயமொன்று மற்றும் 15 குழுக்களின் அறிக்கைகள் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயமும் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லுனம மற்றும் யோதகண்டிய கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல், இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் கணக்கறிக்கைகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. . | நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், உரியவாறு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டிற்குரிய பல்வேறு விடயங்களுக்குரிய செலவுகள் ரூபா 894,067 தொகை குறைவாக மற்றும் லுனம கமநல சேவைக் குழுவில் பல்வேறு விடயங்களைச் | 2025 ஆண்டின் கணக்கறிக்கைகள் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கு ஆண்டிற்குரிய வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைகளின் பெறுமதியினை சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | சேர்ந்த செலவுகள் ரூபா 239,938 தொகை மிகையாகவும், 04 குழுக்களின் பல்வேறு விடயங்களுக்குரிய ரூபா 1,220,576 தொகை குறைவாகவும் மற்றும் 03 குழுக்களின் வருமானம் ரூபா 1,228,914 தொகை மிகையாகவும், 04 குழுக்களின் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 705,139 தொகை குறைவாகவும் மற்றும் 02 குழுக்களின் ரூபா 27,103,470 தொகை மிகையாகவும், 03 குழுக்களில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 612,359 தொகை குறைவாகவும் மற்றும் 02 குழுக்களில் ரூபா 27,225,700 தொகை மிகையாகவும், 04 குழுக்களில் திரண்ட நிதியம் ரூபா 725,470 தொகை குறைவாகவும் மற்றும் 06 குழுக்களின் ரூபா 4,874,220 தொகை மிகையாகவும், 04 குழுக்களின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 10,553,160 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், உரிய முறையில் கணக்குகளில் சீராக்கல் செய்ய வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்களின் கிரயம் 12 குழுக்களில் ரூபா 10,707,809 தொகை குறைவாகவும் மற்றும் 03 குழுக்களில் ரூபா 1,248,975 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 12 குழுக்கள் அமைந்துள்ள காணிகள், மயுராபுர குழுவின் புல் வெட்டும் இயந்திரம், லுனம குழுவின் மோட்டார் சைக்கிள், வலஸ்முல்ல குழுவில் கணினி மற்றும் சேதனப் பசளை உற்பத்தி இயந்திரம் மற்றும் பெரலிஹெல குழுவின் டிரக்டர் வண்டியின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையங்களின் காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதெனவும், மற்றும் ஏனைய வழுக்கள் 2025 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்பபிப்பதற்கும், குழுக்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி மற்றும் ஏனைய நிலையான சொத்துக்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | அங்குனுகொல பெலஸ்ஸ கமநல சேவைக் குழுவின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 622,662 இற்கான தளபாட உபகரண மீதியில் மற்றும் ரூபா 1,560,209 இற்கான மின்சார உபகரண | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்களை சரியாக இனங்கண்டு வகைப்படுத்தி கணக்கீடு செய்ய வேண்டியதுடன், உரிய சரி செய்தல்கள் கணக்குகளில் சீராக்கல் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதியில் நுகர்வுப் பண்டங்களுக்குரிய கிரயம் உட்படுத்தப்பட்டிருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன், அதற்குரிய பெறுமானத் தேய்வு கணித்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான மிகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | உடயால கமநல சேவைக் குழுவின் வருமானங்கள் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், ஏக்கர் வரி வருமானம் கணக்கீடு செய்யும் போது ஆண்டின் போது பணமாக கிடைத்திருந்த ரூபா 552,454 தொகை ஆண்டிற்கான வருமானம் என காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | லுனம கமநல சேவைக் குழுவின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 570,571 தொகைக்கான 03 விடயங்கள் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. கணக்கீட்டுக் கொள்கைகளின் படி இந்த 03 விடயங்களும் மீளாய்வாண்டிற்கான கிரயத்தின் அடிப்படையில் 05 சதவீத வருடாந்த பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 10 சதவீதம் ஒடுங்குபாக முறையில் பெறுமானத் தேய்வின் படி ரூபா 376,553 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்களை இனங்கண்டு சரியாக வகைப்படுத்தலின் படி கணக்கீடு செய்து வெளிப்படுத்தியுள்ள பெறுமானத் தேய்வு விகிதாசாரத்தின் படி பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டியதுடன், உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | லுனம கமநல சேவைக் குழுவின் நாட்குறிப்பு பதிவு இலக்கம் 20 மற்றும் 35 இன் மூலம் முறையே ரூபா 101,043 தொகை மற்றும் ரூபா 122,070 தொகை கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கணக்கிற்கு வரவு | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கல்கள் உரிய கணக்குகளில் பதிவு செய்வதற்கு மற்றும் முன்னைய மாதத்தின் மீதியினை முன்னெடுத்துச் செல்லும் போது |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதி அதே கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல், முன்னைய ஆண்டின் இறுதி மீதியினை மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி என கணக்கீடு செய்யும் போது மற்றும் மீளாய்வாண்டின் மாதாந்த மீதிகள் முன்னெடுத்துச் செல்லும் போது 03 நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் ரூபா 2,589,242 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | சரியாக பதிவு செய்யப்பட வேண்டியதுடன், உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | மீகஸ்ஆர கமநல சேவைக் குழுவின் முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த குழுவின் காணி மற்றும் கட்டிடங்களின் திறன் மதிப்பு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் அதிகரிக்கப்பட்ட பெறுமதி என 02 விடயங்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு வழுக்களை மீளாய்வாண்டில் சரி செய்யாமல் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,809,380 தொகை மற்றும் காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீடு ரூபா 1,405,544 தொகை எனவும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த கணக்கீட்டுக் குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | உடயால கமநல சேவைக் குழுவில் பௌதீக ரீதியாக காணப்பட்ட 288.1 கிலோ கிராம் உர இருப்பின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காததுடன், வலஸ்முல்ல குழுவில் பௌதீக ரீதியாக காணப்படாத 420 கிலோ கிராம் யூரியா இருப்பு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | உடயால குழுவின் இருப்பின் பெறுமதியை கண்டறிவதற்கு சான்றுகள் காணப்படவில்லை எனவும், 2025 ஆரம்ப மீதிகளை பதிவு செய்யும் போது சரி செய்யப்படும் என. | இருப்பு அசைவுகளை சரியாக ஆவணப்படுத்தி நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 குழுக்களில் 16 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய அறிக்கைகளின் பெறுமதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 5,425,166 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது. | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் தொடர்புடைய அறிக்கைகளின் பெறுமதிகளுடன் சமப்பட வேண்டும். சமமின்மைகள் தொடர்பாக விரைவாக இணக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | கட்டுவன கமநல சேவைக் குழுவின் கூடிய விலையான உரத்தின் இறுதியிருப்பு மீதியாகிய ரூபா 1,330,925 தொகை வியாபாரக் கணக்கின கணிய இருப்புக் கணக்கு மற்றும் பேரேட்டுக் கணக்கு ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான பெறுமதிகள் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் கணக்கறிக்கையில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 குழுக்களின் ரூபா 125,535,326 தொகைக்கான சொத்துக்கள், 05 குழுக்களின் ரூபா 99,399,274 தொகைக்கான பொறுப்புகள், லுனம கமநல சேவைக் குழுவின் ரூபா 1,273,816 தொகைக்கான வருமான மீதிகள், மீகஸ்ஆர கமநல சேவைக் குழுவின் ரூபா 198,262 இற்கான செலவு மீதிகள், பெரலிஹெல கமநல சேவைக் குழுவின் ரூபா 336,161 இற்கான இருப்புச் சேதம், 02 குழுக்களின் ரூபா 132,151,541 தொகைக்கான 07 நாட்குறிப்புப் பதிவுகள் மற்றும் லுனம கமநல சேவைக் குழுவின் ரூபா 132,461 இற்கான 02 பற்றுச்சீட்டுக்கள் மெய்மையாய்தல் மற்றும் சான்றுறுதி செய்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆண்டின் கணக்கறிக்கைகளில் சரியான தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு தேவையான பதிவுகள், அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகள் ஆக்கப்பட்ட முறைகளை காட்டக்கூடிய விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| பிரிவு 56 (3) மற்றும் (4) | 09 கமநல சேவைக் குழுக்களின் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,137,023 தொகைக்கான நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரியை அறவீடு செய்வதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | நிலுவை ஏக்கர் வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கால ரீதியாக அறவீடு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| i. நிதிப் பிரமாணங்கள் 103 மற்றும் 104 | பெரலிஹெல கமநல சேவைக் குழுவில் 2023 ஆண்டிற்கான கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்டிருந்த பற்றாக்குறைப் பண்டங்கள், சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் உட்படுத்தியிருக்காததுடன், பற்றாக்குறைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் பற்றாக்குறை பண்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பதிவேடொன்று தயாரிக்கப்படும் என. | சேதங்கள் தொடர்பான விபரங்களை ஆவணப்படுத்தி பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. நிதிப் பிரமாணம் 110 | 03 கமநல் சேவைக் குழுக்களின் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடொன்று பேணப்படும் என. | பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக பேணப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iii. நிதிப் பிரமாணம் 156(1)(அ) | ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவரின் தாமதமொன்று, கவனயீனமொன்று, குற்றமொன்று அல்லது மோசடியொன்று காரணமாக அரசிக்கு ஏற்படக்கூடிய | | |

| | | |
|---|---|---|
| நட்டமொன்று தொடர்பாக அந்த உத்தியோகத்தர் தனிப்பட்ட முறையில் பொறுப்பான இருக்க வேண்டியதுடன், அதன் மூலம் ஏற்படுகின்ற நட்டம் நிரப்பப்பட வேண்டிய போதிலும், வீரவில குழுவினால் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | |
| • 2024 ஜூலை 05 திகதி விற்பனை செய்திருந்த யூரியா உரம் தொடர்பான ரூபா 180,000 இற்கான தொகையொன்று நிலைய எழுதுனரினால் வங்கியில் இடப்பட்டிருக்காததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஏப்ரல் 22 திகதி அளவிலும் அந்தப் பணத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரினால் செலுத்த வேண்டிய மீதித் தொகையென. | அரசுக்கு மேற்கொண்டுள்ள நட்டத்தை உரிய தரப்பினரிடம் விரைவாக அறவீடு செய்வதற்கு மற்றும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| • கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2022 செப்தம்பர் 13 திகதிய 7/2/10/1855 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் வழங்கியிருந்த கட்டளையின் படி உர இருப்பொன்று காணாமல் போதல் தொடர்பாக இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 546,468 தொகைக்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெண் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் மற்றும் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர் ஒருவரினால் செலுத்த வேண்டிய தொகையாகும் என. | அரசுக்கு மேற்கொண்டுள்ள நட்டத்தை உரிய தரப்பினரிடம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • 2024 மே 28 திகதிய SPCG/HM/B/ WEAS/23/14 இலக்கம் கொண்ட முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த 2977.46 கிலோ கிராம் யூரியா இருப்பு மற்றும் 717.5 கிலோ கிராம் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் விசாரணையொன்று நடாத்தப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட விசாரணையை விரைவாக முடிவுறுத்துவதற்கும் அதன்படி, அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை உரிய தரப்பினர்களிடம் விரைவாக அறவீடு செய்வதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | MOP இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்பான தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஏப்ரல் 22 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | நிதிப் பிரமாணம் 177 | நாளாந்தம் கிடைக்கக்கூடிய மொத்த வருமானம், நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் அனுப்பப்பட வேண்டிய போதிலும், வீரவில மற்றும் மீகஸ்ஆர நிலையங்களின் மொத்த வருமானம் நாளாந்தம் வங்கியில் வைப்புச் செய்யாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நாளாந்தம் கிடைக்கக்கூடிய மொத்த வருமானங்கள் நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் அனுப்பப்பட கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். |
| v. | நிதிப் பிரமாணம் 257 | பெலிஅத்த குழுவினால் மீளாய்வாண்டின் போது 114 இலக்க உறுதிச் சீட்டின் மூலம் உர கடன் பில்பத்திரத்தை தீர்ப்பதற்காக ரூபா 50,000 கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவினை சான்றுபடுத்திருக்கவில்லை. | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | கொடுப்பனவு உறுதிச்சீட்டு சான்றுபடுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| vi. | நிதிப் பிரமாணம் 316 | அரச அனைத்துப் பணமும் இரும்புப் பெட்டிகளில் மற்றும் பாதுகாப்புப் பெட்டிகளில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 06 குழுக்களின் கமநல வங்கிகளுக்காக இரும்புப் பெட்டி பயன்படுத்தப்பட்டிருக்கவில் லை. | செயற்படாத இரும்புப் பெட்டிகள் தொடர்பாக மாவட்ட அலுவலகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | அரசின் அனைத்துப் பணம் இரும்புப் பெட்டிகள் மற்றும் பாதுகாப்புப் பெட்டிகளில் வைப்புச் செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| vii. | நிதிப் பிரமாணம் 371 | நிமித்தமொன்றுக்காக பெற்றுக்கொள்ளப்படுகின்ற துணைக் கட்டுநிதி குறிப்பிட்ட கருமம் முடிவடைந்தவுடன் அல்லது அதனை பெற்ற நாள் முதல் 14 | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | முற்பணங்கள் 14 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், லுனம குழுவில் 2024 ஏப்ரல் 01 திகதி நடைபெற்ற புதிய அரிசி திருவிழாவிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 200,000 தொகை முற்பணம் கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஜூன் 12 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | | தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| viii. | நிதிப் பிரமாணம் 454(1) | 07 கமநல சேவைக் குழுக்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணியிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான சொத்துக்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ix. | நிதிப் பிரமாணம் 880 | 13 கமநல சேவைக் குழுக்களின் பணம் அல்லது இருப்பு தொடர்பாக செயற்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களினாலும் பிணை வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்களினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கும் தேவைப்பாடொன்று காணப்படவில்லை என கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது என. | விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்களிடம் பிணை வைப்புப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| **(இ)** | **கமநல சேவை ஆணையாளரின் 1981 ஒக்தோபர் 16 திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | பிரிவு 03(உ) | அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் உரிய கணக்கு ஏடுகளில் முறைப் பிரகாரம் மற்றும் உரிய நேரத்தில் உட்படுத்த வேண்டியிருந்த போதுலும், 03 குழுக்களினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் உரிய கணக்கு ஏடுகளில் முறைப் பிரகாரம் மற்றும் உரிய நேரத்தில் உட்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பந்தி 21(2) | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் இருப்பு புத்தகங்களில் பதிவுகள் சரியானவை என திருப்தி அடைவதற்காக குறைந்தபட்சம் இரு வாரங்களுக்கு ஒருமுறை பரிசோதனை மேற்கொண்டு கையொப்பமிடப்பட வேண்டியிருந்த போதிலும், 10 கமநல சேவைக் குழுக்களினால் அந்த அறிவுரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இருப்புப் பதிவேடு மீளாய்வாண்டின் போது பரிசோதனைக்கு உள்ளாக்கியிருக்கவில்லை. | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையேனும், பரிசோதனை மேற்கொண்டு கையொப்பமிட வேண்டியிருந்ததுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2013 மார்ச் 08 திகதிய 7/5/3 – 1/40 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் முன்மொழிவு இலக்கம் 07 | மிகைப் பணத்தினை குறைந்த ஆபத்துடைய நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து வட்டி வருமானம் ஒன்று உழைத்தல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய போதிலும், 05 குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல், ரூபா 28,227,526 தொகை சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | வீரவில குழு 2025 ஆண்டில் ரூபா 1,000,000 மீதியொன்று முதலீடு செய்யப்பட்டுள்ளது என. | முறையான அங்கீகாரத்துடன் மீதியான 27 மில்லியன் தொகையையும், குறைந்த ஆபத்துடைய நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து வட்டி வருமானம் ஒன்றினை உழைத்தல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (உ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2014 ஆகஸ்ட் 22 திகதிய சுற்றறிக்கை இலக்கம் 07/2014 (107 திருத்தம் III) இன் பிரிவு 02 | நிலையக் கட்டிடத்தில் வங்கி வசதிகள் காணப்படாத சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கக்கூடிய கையிருப்புத் தொகை ரூபா 10,000 இனை மிகைக்கக் கூடாது இருந்ததுடன், பிரிவு 16 இன் படி உச்சமட்ட வரையறையினை மிகைத்த தொகையொன்று நிதிப் பொறுப்பாளரினால் தடுத்து | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டிதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைக்கப்படவில்லை என நிலையத்தின் நிறைவேற்றுச் செயலாளரினால் திருப்தி அடைய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 13 குழுக்களினால் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காமல் நாளாந்தம் பணம் கையிருப்பில் வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 நவம்பர் 02 திகதிய 7/5/12 க.அ.பொது கடிதத்தின் பந்தி 05 | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் சரியாக கணக்கு அறிக்கைகள் சரியாக தயாரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தி கணக்கறிக்கைகள் சரியாக பரிசோதனை செய்து குறைபாடுகளை சரி செய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீகஸ்ஆர கமநல சேவைக் குழுவினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீகஸ்ஆர கமநல சேவைக் குழுவினால் சரியாக கணக்கறிக்கைகள் தயாரிப்பதை சான்றுபடுத்த வேண்டும். |
| (எ) | கமநல சேவை ஆணையாளரின் 2022 திசெம்பர் 13 திகதிய சுற்றறிக்கை இலக்கம் 04/2012 (திருத்தம் vii) | கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்டமொன்றினால் வைத்துக்கொள்ளக்கூடிய கையிருப்பின் உச்ச வரையறை ரூபா 50,000 தொகை எனினும், 06 கமநல குழுக்களினால் அந்த வரையறையை மிகைத்து நாளாந்தம் பணத்தை கையிருப்பில் வைத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | எதிர் காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுத்தப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுத்த வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 ஏப்ரல் 24 திகதிய 01/2023 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | | | |
| | i. பிரிவு 06 (10) | கடன்கள் வழங்கும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய விவசாய இடர் கடன் அணவல் கணக்கின் விவசாய பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்ட கடன் | 2025 ஆண்டில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் வழங்கும் சந்தர்ப்பத்தில் அதற்குரிய விவசாய இடர் கடன் அணவல் கணக்கின் விவசாய பங்களிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகையில் இருந்து கழித்து விவசாய இடர் கடன் அணவல் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும், வீரகெடிய கமநல சேவைக் குழு 2024 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 6,435,000 தொகைக்கான கடனுக்கான ரூபா 42,350 இற்கான விவசாய இடர் கடன் அணவலினை அறவீடு செய்திருக்கவில்லை. | | அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகையில் இருந்து கழிப்பதற்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பனருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ii. பிரிவு 07 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் இடர் கடன் அணவல் கணக்கில் சேகரிக்கப்பட்ட தொகை இடர் நிதிய நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், 03 குழுக்களினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | இடர் கடன் அணவல் கணக்கில் சேகரிக்கப்பட்ட பணம், இடர் நிதிய நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2024 பெப்ரவரி 20 திகதிய 7/5/9 (அ.பிர) - இலக்கம் கொண்ட கடிதத்தின் பந்தி 1.5 | காலவதியாகிய இருப்புக்களை பதிவழிப்பதற்காக எதிர் காலத்தில் அங்கீகாரம் வழங்கப்படாமையால் விற்பனைப் பண்டங்களின் இருப்புக்கள் காலவதியாக முன்னர் விற்பனை செய்வதற்கு அல்லது மாற்றிக்கொள்ளல் இருப்புக்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பொன்றாக காணப்பட்ட போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் 08 கமநல சேவைக் குழுக்களினால் மீளாய்வாண்டு இறுதியளவிலும், காலவதியாகிய இருப்புக்கள் களஞ்சியத்தில் காணப்பட்டது. | அப்புறப்படுத்தல் மற்றும் இருப்புக்களை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | முறையான பரிசோதனை மேற்கொண்டு அறிவுரைக் கடிதத்தின் படி நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தரிடம் ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த 14 கமநல சேவைக் குழுக்களின் 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி கூட்டுத்தொகை ரூபா 13,839,365 இற்கான மிகையொன்றும், 03 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,113,496 இற்கான பற்றாக்குறை ஒன்றும் மற்றும் 17 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,517,427 இற்கான தேறிய இலாபமொன்றும் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 இன் 06 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 33 ஆம் இலக்க பீடை நாசினி கட்டுப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 21(அ)(I) இன் படி நாட்டில் செயற்படும் பீடை நாசினி விற்பனை நிலையங்கள் அனைத்தும் பீடை நாசினி விற்பனைச் சான்றிதழ் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் விற்பனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், பதகிரிய கமநல சேவைக் குழுவினால் பீடை நாசினி விற்பனை நிலையங்களினால் விற்பனை அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விவசாயத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என. | பீடை நாசினிகளை கட்டுப்படுத்தும் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் ‘‘விவசாய இயந்திர உபகரணங்களை பாதுகாத்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல்’’ என்ற தலைப்பையுடைய 2015 ஜூன் 22 திகதிய 10/2015 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் வழங்கியிருந்த அறிவுரையின் படி அனைத்து இயந்திரங்களும் வெயில் - மழையினால் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும், டிரக்டர் வண்டி மூடப்படாமல் திறந்த வெளியில் காணப்படுகின்றதென அவதானிக்கப்படுகின்றதுடன், சுற்றறிக்கையின் பந்தி (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இயந்திர உபகரணங்களின் திருத்த வேலைகளில் குறிப்பிட்ட பெறுகை முறை கடைபிடிக்கப்பட்டு மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த | கூரை குழுவின் செலவின் மூலம் சரி செய்யப்பட்ட போதிலும், குரங்குகள் அவற்றை உடைத்திருந்ததுடன், டிரக்டர் வண்டியை உதிரிப் பாகங்கள் போடப்பட்டு பயன்படுத்த முடியாத மட்டத்தில் காணப்படுகின்றதென கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது என. | மீளாய்வாண்டில் வருமானம் உழைப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த டிரக்டர் வண்டியை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு முடியாதவிடத்து அகற்றுவதற்கு . நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், மீளாய்வண்டின் போது வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த டிரக்டர் வண்டியொன்றின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு பெரலிஹெல கமநல சேவைக் குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் விவசாய ஆய்வு உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 112,300 தொகை பெறுமதியான 05 வகையான உரங்களுக்கான பணம் 04 மாதங்களுக்கும் 09 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவற்றை மீண்டும் அறவீடு செய்வதற்கு மயுரபுர கமநல சேவைக் குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கால ரீதியாக அறவீடு மேற்கொள்ளாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் 2015 ஜூன் 22 திகதி 09/2015 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் படி குழுவினால் அரச நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கும் போது சதுர அடியொன்றுக்கு ரூபா 20 அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், வலஸ்முல்ல் கமநல சேவைக் குழுவினால் 2016 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை சதுர அடியொன்றுக்கு ரூபா 15 வீதம் மாத்திரம் அறவீடு செய்திருந்தமையால், 03 அரச நிறுவனங்களில் இருந்து ரூபா 239,120 இற்கான கடை வாடகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | கடையறை வாடகை சுற்றறிக்கையின் பிரகாரம் அறவீடு செய்தல் மற்றும் நிலுவை வாடகையை விரைவாக அறவீடு செய்வதற்கும், கால ரீதியாக அறவீடு செய்யாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | வீரகெடிய கமநல சேவைக் குழுவின் கூட்டுப் பெறுமதி ரூபா 51,665 தொகைக்கான உர இருப்பை விற்பனை செய்வதற்கு அல்லது காலவதியாவதற்கு முன்னர் மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் 2025 ஜனவரி 26 திகதி அளவில் அந்த இருப்பில் ரூபா 6,625 தொகைக்கான உர இருப்பு காலவதியாகி இருந்ததுடன், கூட்டுப் பெறுமதி ரூபா 45,040 இற்கான தொகை இருப்பு | காலவதியாகிய இருப்பு அப்புறப்படுத்தப்பட்டது என. | முறையான பரிசோதனை மேற்கொண்டு இருப்புக்கள் காலவதியாவதற்கு முன்னர் மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களிடம் நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்து 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 51,665 இற்கான செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | | |
| (ஊ) | உடயால கமநல சேவைக் குழுவினால் வ/ப லங்கா உரக் கம்பனி மூலம் 2023 பெப்ரவரி 15 திகதி ரூபா 181,815 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த மரக்கறி உரை இருப்பு கணக்காய்வுத் திகதியாகிய 2025 மார்ச் 14 திகதி அளவிலும் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், அந்த உர இருப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவும் அதன்படி, விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | உர இருப்பு கொள்வனவு செய்யப்பட்டு குறுகிய காலத்தில் திறந்த சந்தையில் விலைகள் குறைந்திருந்ததுடன், விலைகளை திருத்துவதற்காக குறிப்பிட்ட கம்பனி மற்றும் மாவட்ட அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | உர இருப்பினை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 / 2024 பெரும் போகத்திற்காக அரசினால் விவசாயிகளுக்கு இலவசமாக வினியோகிப்பதற்காக கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கியிருந்த TSP மற்றும் யூரியா உரம் 1463kg தொகை விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பதகிரிய கமநல குழுவினால் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | 2023/24 பெரும் போகத்தில் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கிய பின்னர் மீதியான 1350kg யூரிய மற்றும் 113kg TSP எண்ணிக்கை தொடர்பாக எடுக்க நடவடிக்கை தொடர்பாக விவசாய அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் அறிவுரை வேண்டப்பட்டுள்ளது என. | தேவைப்பாட்டின் மீதி உர இருப்புக்கள் விவசாயிகளுக்கு வினியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 குழுக்களுக்குரிய 09 விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள், 02 விற்பனை நிலையங்கள், 19 நீர் மட்ட அளவை மாணி, 04 எண்ணெய் விசிரும் இயந்திரங்கள், 02 நிழற்பிரதி இயந்திரங்கள், 08 டிரக்டர்கள், 03 டேலர்கள், 01 சேதனப் பசளை கிளைகளை | உத்தியோகபூர்வ வாசஸ்தளம் மற்றும் விற்பனை நிலையங்களின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கும், இயந்திர உபகரணங்களை அப்புறப்படுத்துவற்கு, ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு, ஏல விற்பனை | பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கும் ஏனைய சொத்துக்களை மற்றும் உபகரணங்களை முறையான அங்கீகாரத்துடன் |

| | | |
|---|---|---|
| துண்டாக்கும் இயந்திரம், 01 கலப்பை, 04 சேறுபடுத்தும் சக்கரங்கள், 03 அச்சு இயந்திரங்கள், 03 ஸ்கேனர் இயந்திரங்கள், 03 இரும்புப் பெட்டிகள், 01 விரலடையாள இயந்திரம், 01 நாட்டு மேடை குடில், 01 உரக் களஞ்சியம், 01 மடிக்கணினி, 01 உர உற்பத்தி இயந்திரம் என்பன விளைவற்றுக் காணப்பட்டது. | செய்வதற்கு மற்றும் வழங்கியிருந்த நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 1.3.2 பந்தியின் படி பணம் வழங்கும் மூலவளம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் பெறுகை வழிகாட்டல் கோவையின் அனைத்து கொள்வனவுகளுக்கும் பொருந்தக்கூடியது என சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 11 குழுக்களினால் கூட்டுத்தொகை ரூபா 25,146,867 இற்கான விதை நெல் மற்றும் இரசாயன உரம் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டல் செய்முறைக்கு புறம்பாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 05 குழுக்கள் எதிர் காலத்தில் பெறுகை செய்முறையை கடைபிடிப்பதுடன், மீதியான குழுக்கள் விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையின் மீது மற்றும் உதவி ஆணையாளரினால் அங்கீகாரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் கொள்வனவு செய்யப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டிதுடன், அதற்கு இணங்கியிருக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 குழுக்களில் 197 விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர் பதவிகள், 07 நிலைய முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்று, நிலைய விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர் பதவியொன்று, கமநல வங்கி ஆய்வு உற்பத்தி உதவியாளர் பதவியொன்று மற்றும் 08 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், நெடொல்பிடிய கமநல சேவைக் குழுவின் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மிகையாக காணப்பட்டது. | இது தொடர்பாக மாவட்ட அலுவலகத்தின் ஊடாக தலைமை அலுவலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | பதவியணி மீளாய்வு மேற்கொண்டு அரச கொள்கைகளின் படி மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கமநல வங்கி அலுவல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 13 கமநல வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கியிருந்த கடன் தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,192,362 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 02 குழுக்களினால் ரூபா 1,463,470 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், ரூபா 6,876,586 இற்கான கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் ரூபா 852,306 இற்கான கடன் மீதிகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கால ரீதியாக அறவீடு செய்யாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |